**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**இரண்டாம் வருடப் பரீட்சை கலை கலாச்சாரப் பீடம் – 2011/2012**

**முதலாம் அரையாண்டு (மார்ச் / ஏப்ரல், 2015)**

**NIT 2120 – Introduction to Computational Arts**

செயன்முறைப் பரீட்சை

01 JUN 2015

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும் நேரம்: 2 மணித்தியாலங்கள்

**அறிவுறுத்தல்:**

உங்களது சுட்டிலக்கத்தின் **(Index No)** பெயரில் உறையொன்றினை **(Folder)** கணிமேசையில் **(Desktop)** உருவாக்கவும்.

Q1) எமது இலங்கை தாய் நாடானது 30 வருட அசாதாரண நிலைக்குப் பின்னர் தற்சமயம் ஒரு அமைதியான சூழ் நிலையில் முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கமானது அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக்கொள்வது என முடிவு செய்துள்ளது. சிறு காடுகள் (Jungles), கடற்கரை (Beach), சரணாலயங்கள் (Sanctuaries), நீர்வீழ்ச்சிகள் (Waterfall) போன்றவை இலங்கையில் காணப்படும் சில முக்கிய பகுதிகளாகும். இவற்றினைக் கருத்தில் கொண்டு ஒரு சுவரொட்டியினை (Poster) அதிகளவு சுற்றுலாப் பயணிகளை கவரும் விதமாக உருவாக்கி அதனை இணையத் தளத்தில் பதிவேற்றும் பொறுப்பினை அரசாங்கமானது உங்களுக்கு வழங்கியுள்ளது எனக் கருதி போட்டொசொப் (Photoshop) இனைப் பயன்படுத்தி ஒரு சுவரொட்டியினை (Poster) உருவாக்குக.

நீர் சுவரொட்டியினை (Poster) உருவாக்கும் போது பின்வருவன கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்:

i. File size

a. அகலம் (Width) 12"

b. உயரம் (Height) 9"

c. Resolution 100

ii. தரப்பட்டிருக்கும் படங்களை (Images) மாத்திரம் பயன்படுத் வேண்டும்.

iii. **JPEG** மற்றும் **Photoshop (PSD)** ஆகிய வகைகளில் (Format அறிவுறுத்தலில் உருவாக்கிய உறையினுள் கட்டாய சேமிக்கப்படல் வேண்டும்.

Q2) கீழ்க்காட்டப்படும் வலைப்பக்கத்தை (Webpage) **HTML (Hyper Text Marku Language)** மற்றும் **CSS (Cascading Style Sheets)** ஆகியவற்றை பயன்படுத்தி உருவாக்கி அதனை "MyWebPage" எனும் பெயரில் அறிவுறுத்தலில் உருவாக்கிய உறையினுள் சேமிக்குக.

வலைப்பக்கத்தினை உருவாக்கும்போது பின்வருவனவற்றையும் கருத்தில் கொள்க:

i. **FrameA** இன் பின்னணி நிறம் (Background colo) நீலமாகவும் **(blue)**, "**My Webpage**" எனும் தலைப்பின் நிறம் மஞ்சளாகவும் **(Yellow)** இருத்தல் வேண்டும்.

ii. நீர் பயன்படுத்தும் எழுத்துக்கள் "**Times New Roman**" வடிவத்தில் (Font Style) இருத்தல் வேண்டும்.

iii. **FrameB** இல் இருக்கும் ஏதாவது ஒரு படத்தில் கிளிக் (Click செய்யும்போது அந்தப் படம் **FrameC** இல் தோன்ற வேண்டும்.

iv. **FrameD** இல் இருக்கும் **SUBMIT** எனும் பொத்தானை (Button) அழுத்தும்போது Subject எனும் நிரலில் ஏதாவது ஒரு பாடமேனும் தெரிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லையெனில் பிழைச் செய்தி (Error Message) காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.


FrameA
My Webpage
FrameB
FrameC
FrameD
Exam Entry Form
Subjects
IT
Tamil
English
Math's
Name
RegNo
SUBMIT
This is my sample webpage
© Second Year Students, Faculty of Arts & Culture